ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2477/36 - 2026 පෙබරවාරි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.02.26
2477/36 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/DOL/04/04/05/3/18.

காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/WS/139.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர பஹல கோரலே இல. 1155 தொலுவ கிராம அலுவலர் பிரிவில் மெதபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்த, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக் கப்பட்ட கடத்திரல் வரைபடத்தின் இல. 320026 தொகுதி இல. 1, தாள் இல. 8 மற்றும் 2021.08.20 ஆந் திகதிக்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இல. 185 இனால் காட்டப்பட்டுள்ள முழு காணியின் அளவில் 0.0665 ஹெக்டயார் விஸ்தீரணத்திலான கீழ்க் குறிப்பிடப்படும் எல்லைகளுடைய லியோவத்த மற்றும் ஒருவ கெடுஹேன எனும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 185**

காணியின் பெயர்: லியோவத்த மற்றும் ஒருவ கெடுஹேன; விபரம் : வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு, காணி எடுத்தற் சட்டத்தின் 38 (அ) இடைக்கால நிபந்தனையின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது; ஆரம்ப உரிமை கோருவோர்: பீ.ஆர். சீலவதி மற்றும் சந்திமா குமாரி லியன்தெனிய எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையை முடித்துக் கொள்வதற்காக; விஸ்தீரணம்: 0.0665 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொலுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ.ஜீ. யமுனா தயாரத்ன,
பிரதேச செயலாளர்,
தொலுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொலுவ,
2026, பெப்புருவரி 20.

EOG 02 - 0211

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: Miri/DS/L/3.

காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2391/06 மற்றும் 2024.07.01 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 3ஏ பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடத்திரல் வரைபட இல. 510233 தொகுதி 03 தாள் 15 இன் துண்டு இல. 36 துண்டுகளுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

**கடத்திரல் வரைபட இல. 510233 தொகுதி 03 தாள் 18 இன்**

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: கதுருகஹவத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: மடிதியவல அப்புஹாமிலாகே நிலந்த தர்ஷன அபயசிங்ஹ, இல. 63/2, மிதெல்லவல, பல்லெவெல, (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0083 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**

காணியின் பெயர்: கதுருகஹவத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை உள்ளது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - (நீக்கப்பட்டுள்ளது); விஸ்தீரணம்: 0.0059 ஹெக்டயார்.

டபிள்யூ.பி. பிரசாத் இந்திக்க,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
மீரிகமை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மீரிகமை,
2026, பெப்புருவரி 16.

EOG 02 - 0212

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.